# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 30.04.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற சில வாரங்களாக நீங்கள் அறிந்திருப்பது போன்று நான் ஐரோப்பாவின் சில நாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றிருந்தேன். ஆப்பிரிக்காவின் சில நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்வதற்காகவே வகாலத்துத் தப்ஷீர் சில மாதங்களுக்கு முன்பிருந்தே வகாலத்துத் தப்ஸீர் நிகழ்ச்சிகளை தயாரித்தது. அதற்கான ஆய்வுகளும் ஆரம்பமாயின. மேற்கு ஆஃப்பிரிக்காவின் சிரோலியோன் போன்ற நாடுகளுக்கு – இதுவரை நான் செல்லாத நாடுகளுக்கு செல்வதற்காக திட்டமிடப்பட்டது. அந்நாடுகளும் அழைப்பு விடுத்திருந்தன. எனக்கும் அங்கு செல்ல விருப்பம் இருந்தது. ஆனால் பிறகு அந்நாடுகளிலிருந்து ஜனவரி, பிப்ரவரியிலிருந்து சில தகவல்கள் வரத்தொடங்கின. அரசியல்ரீதியாகவும் நாட்டின் சூழ்நிலையும் சுற்றுப்பயணம் செய்யத் தகுந்ததாக இல்லை. அதனால் அந்த சுற்றுப்பயண நிகழ்ச்சி மாற்றப்பட்டது.

அல்லாஹ்வின் ஏதோ ஒரு விருப்பமாக இருந்திருக்கும். ஆனால் அந்த நிகழ்ச்சிகளை ரத்து செய்யப்பட்ட பிறகும் கூட வேறு நாடுகளுக்கு செல்லும் திட்டம் இருந்ததில்லை. பிறகு ஸ்பெயின் ஜல்ஸா பற்றி செய்தி கிடைத்தது. ஸ்பெயின் செல்ல வேண்டும் என்ற ஊக்கம் உள்ளத்தில் உருவானது. பிறகு இத்தாலியில் பிரச்சார நிலையம் கட்டப்பட்டது. அதற்காக அங்கு வந்த போது சுவிட்சர்லாந்துக்காரர்கள் பக்கத்தில் வந்துவீட்டீர்கள். அப்படியே எங்கள் நாட்டிற்கும் வந்து விடுங்கள் என்றனர். அங்கும் சுற்றுப்பயணம் செய்து பல வருடங்கள் ஆகி விட்டது. பிறகு எந்தவித முன்னேற்பாடும் இல்லாமலேயே இந்த நிகழ்ச்சிகள் அமைந்து கொண்டே வந்தன. ஆனால் அல்லாஹ் தனது அருளால் இந்த பயணத்தில் பெரும் பரக்கத்தை ஏற்படுத்தினான். இந்தப் பயணம் அந்த குறிப்பிட்ட ஜமாஅத்துகளின் அன்பர்களின் ஈமான் அதிகரிக்கக் காரணமாக அமைந்ததை போன்று எனக்கும் அருளுக்குரியதாக அமைந்தது. இறைவனின் ஒவ்வொரு செயலிலும் மிகுதியான ஹிக்மத் இருப்பதை உணர்ந்தோம். ஸ்பெயின் சுற்றுப்பயணம் உருவான பிறகு கூட ஸ்பெயின் ஜல்ஸாவில் கலந்து கொள்ளப் போவதாக கூறவில்லை. இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தேசம் இருந்தது. ஜமாஅத்களைப் பற்றி ஆய்வு செய்யக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கலாம் என்று கருதியிருந்தனர். இங்கிருந்து (இலண்டனிலிருந்து) செல்வதற்கு முன் ஸ்பெயின் அமீரிடம் இருந்து கடிதம் வந்தது. நீங்கள் வரும் நாட்கள் ஜல்ஸாவுக்கும் ஏற்பாடு உள்ளது. முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜல்ஸாவுக்கு சில நாட்களுக்கு முன் வருகிறீர்கள். ஜல்ஸாவின் இந்த நாட்களில் வருவதால் ஜல்ஸாவை ஒரு வாரம் தள்ளி வைக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். ஜல்ஸா அங்கு நடக்க இருப்பது எனக்குத் தெரியும். எனவே தான் இந்த நாட்களை நான் ஜல்ஸாவுக்காக நிர்ணயித்துள்ளேன். ஜல்ஸாவை தள்ளி வைக்க வேண்டாம் என்று கூறிவிட்டேன்.

இதனை நான் கூறக் காரணம், இந்த சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் திட்டமிட்டு ஒப்புதல் வாங்கப்பட்ட நிகழ்ச்சியாக அல்லாமல் உருவானது. நான் ஏற்கனவே கூறினேன். ஸ்பெயினில் ஜல்ஸா நடைபெறுகிறது. ஆனால் நான் கலந்து கொள்வது உறுதியில்லை என்ற அளவுக்கு கூறியிருந்தேன். இந்தப் பயணத்தில் முதல் இலக்கு பிரான்ஸ் ஆக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் மராக்கஸ் அல் ஜஸாயிர் தீபகற்ப நாடுகளில் உள்ள மக்களிடம் ஜமாஅத்தின் மீது அதிக கவனம் திரும்பியுள்ளது. அம்மக்கள் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். நிறைய பைஅத்துகள் கூட நடக்கின்றன. இதுபோன்று சில ஆப்பிரிக்கவாசிகள் பிரான்ஸின் தாக்கத்தின் கீழ் இருப்பவர்களாவர். அதேபோன்று ஆப்பிரிக்காவில் பிரான்ஸ் மொழி பேசுபவர்கள் அவர்களின் சிலர் பிரான்ஸுக்கு வந்துள்ளனர். அவர்களின் பைஅத்களும் நடக்கின்றன. அல்லாஹ்வின் அருளால் நல்ல எண்ணிக்கையில் இருக்கின்றனர். மிகவும் செயல்திறனுள்ள, ஜமாஅத் அமைப்பில் உடனடியாக இணைந்து செயல்படும் மக்களாக உருவாகி வருகின்றனர். தேசிய செயற்குழுவிலும் இந்த புது

அஹ்மதிகளுள் ஒரு கணிசமான எண்ணிக்கையில் மக்கள் உள்ளனர். பிரான்ஸில் ஒரு பிரான்ஸ்காரர், பெல்ஜியன் ஒருவர், மாராக்கஸ்காரர்கள் சிலர் பைஅத் செய்யும்போதே மிகவும் உணர்ச்சி வேகத்துடன் இருந்தனர். புதிதாக பைஅத் செய்த பலருடன் முதல் சந்திப்பாக இருந்தது. அவர்களும் மிக உணர்ச்சிவசப்பட்டவர்களாக இருந்தனர். பலர் என்னிடம் துஆ செய்யுங்கள். எமது ஈமானில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். எமது தக்வாவிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். எமது தக்வாவிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கொள்கையை வளர்ச்சி அடையச் செய்யவும் தக்வாவில் முன்னேறவும் இவர்களிடம் சிறப்பான உத்வேகம் உள்ளது. கிலாஃபத்துடன் விசுவாசத் தொடர்பை வெளிப்படுத்தவும் செய்தனர். அவர்களது கண்களில் இருந்தும், செயல்களில் இருந்தும் இது தெரிய வந்தது. அவர்களின் உணர்வை எடுத்தியம்புவது மிகவும் கடினம். ரிப்போர்ட்டுகள் வெளியிடப்படும். நீங்கள் அதில் படித்துக் கொள்ளலாம். இந்த புதிதாக பைஅத் செய்தவர்களின் உணர்வுகளை விளக்குவது மிகவும் சிரமமாகும். பிரான்ஸில் மட்டுமல்ல. நான் சுற்றுப்பயணம் செய்த எல்லா இடங்களிலும் பைஅத் செய்யக்கூடிய அரபு மொழி பேசுபவர்கள் அல்லது அங்குள்ள உள்ளூர்வாசிகள் அனைவரிடமும் காணப்படும் மாசற்ற தூய்மையை விலக்குவது கடினமாகும். எந்த நாட்டிலும் வசிக்கும் அரபி மொழி பேசுபவர்கள் MTA3 அல் அரபியா மூலம் நமது தூதுச் செய்தியைப் பெற்றவர்கள், அதனை நம்மிடம் கூறினர். நாங்கள் உடனே துஆ செய்தோம். இறைவன் எமது துஆவைக் கேட்டு இந்த தூதுச் செய்தி மூலம் வழிகாட்டியுள்ளான் என்றனர்.

அவர்களுள் சிலருக்கு இறைவன் கனவின் மூலம் வழிகாட்டியுள்ளான். அம்மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையோ ஏதாவது ஒரு கலீஃபாவையோ கனவில் கண்டனர். MTA3 அல் அரபியாவைப் பற்றி நான் கூறியிருந்தேன். நான் சந்தித்தவர்கள் எல்லாருமே MTA3 அல் அரபியா குழுவின் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு தமது துஆவையும் கூறினர். குறிப்பாக கேள்வி பதில் மஜ்லிஸில் வரும் நபர்களை மிகவும் துஆவுடன் நினைவு கூர்ந்தனர். அல்லாஹ் இந்த MTA குழுவில் உள்ள எல்லா நண்பர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக. அவர்களது ஈமான், இக்லாஸில் வளர்ச்சியை வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்ளுடைய செய்தியை எடுத்துச் சொல்வதில் இரவும் பகலும் மூழ்கி உள்ளனர். அதுபோன்று MTA –வின் மற்ற சேனல்களும் உள்ளன. அதில் பணியாற்றும் எல்லா நண்பர்களுக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. அவர்கள் நம் முன்னால் தொலைக்காட்சியில் தோன்றுவதில்லை. ஆனால் திரைக்குப் பின்னால் அசாதாரணமான தொண்டு செய்கின்றனர். எவ்வாறிருப்பினும் நான் பிரான்ஸின் செய்தியை சொல்லி வந்தேன்.

பிரான்ஸில் பல பண்பாளர்களுக்கு மத்தியில் சில நாட்கள் கண்மூடி முழிப்பதற்குள் கழிந்து விட்டன. இவ்வளவு சீக்கிரமாக நாள்கள் கழிந்ததே தெரியவில்லை. அங்கிருந்து ஸ்பெயினுக்கு புறப்பட்டேன். இரண்டு நாட்கள் பயணத்திற்குப் பிறகு ஸ்பெயினின் பெட்ரோபார் –ல் நமது மஸ்ஜித் பஷாரத் –ஐ அடைந்தோம். அங்கு ஒரு சில நாட்களுக்குப் பிறகு ஜல்ஸா ஆரம்பமாகவிருந்தது. அன்பர்கள் ஒன்றுகூடியிருந்தனர். புர்தகால் (போர்ச்சுக்கல்), மராக்கஸ் மக்களும் வந்திருந்தனர். புர்தகால் இப்போது ஸ்பெயினின் கீழ் உள்ளது. எனவே ஸ்பெயினின் பொறுப்புப் பிரச்சாரகர் தான் புர்தகால் ஜமாஅத்தையும் பார்த்துக் கொள்கிறார். நான் அங்கு போவதற்கு முன்னரே அங்கு ஒரு முபல்லிக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இப்போது அல்லாஹ்வின் அருளால் அந்த முபல்லிக் அப்பகுதிக்கு போய் சேர்ந்து விட்டார். அல்லாஹ் இந்த புர்தகால் ஜமாஅத்தையும் செயல்பாடுள்ள ஜமாஅத்தாக ஆக்குவானாக.

புர்தகாலிலும் பள்ளிவாசல் கட்டுவதற்காக முயற்சி நடந்து வருகிறது. அல்லாஹ்வின் அருளால் புர்தகாலிலும் மஸ்ஜித் உருவாகட்டுமாக. ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையட்டுமாக.

புர்தகாலிலும் பல்வேறு பகுதியிலிருந்து வந்த மக்கள் கணிசமாக இருந்தனர். மார்க்க உணர்வு உள்ளவர்களின் பைஅத்துகள் நடந்துள்ளன. மேலும் தப்லீக் செய்யவும், ஜமாஅத்தை பராமரிப்பதற்கும் மஸ்ஜித் மிகவும் முக்கியமானதாகும். மஸ்ஜித் உருவாகும் போது இன்ஷா அல்லாஹ் உள்ளூரில் தப்லீக்

களம் திறக்கும். புதிய முபல்லிக் அங்கு சென்றுள்ளார். அவருக்கு சரியான முறையில் பணி செய்ய அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக. இதுபோன்று மராக்கஸ் ஜமாஅத்தின் தலைவர் சில ஜமாஅத் அன்பர்களுடன் வந்திருந்தார். ஸ்பெயின் அருகில் இருப்பதால் ஸ்பெயின் மூலமாகவே இங்கு ஜமாஅத் உருவானது – மாஷா அல்லாஹ். இந்த ஜமாஅத்தும் முன்னேற்றத்தின் பக்கம் செல்லும் ஜமாஅத் ஆகும். தூய்மை விசுவாசத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதேபோன்று ஸ்பெயினிலும் அரபு பேசுகின்ற அஹ்மதிகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இங்கும் சில பைஅத்துகள் நடந்துள்ளன. என் கையில் பைஅத் செய்யும் நிகழ்ச்சி இருந்தது. அல்லாஹ் இந்த எல்லாருடைய ஈமானிலும் பரக்கத் வழங்குவானாக. வளர்ச்சியை வழங்குவானாக. ஸ்பெயினில் ஜல்ஸா நடந்தது. அங்கும் அல்லாஹ்வின் அருளால் விருந்தினர்கள் வந்தனர். நல்ல விளைவைப் பெற்றுச் சென்றனர். என்னை சந்தித்த போது தமது தூய நல்ல தாக்கம் குறித்து குறிப்பிட்டனர். சென்ற முறை 2005 -ல் ஸ்பெயின் சென்ற போது பிரான்ஸில் இன்னொரு பள்ளி கட்ட வேண்டும் என்று ஜமாஅத்திற்கு அறிவுறுத்தினேன். இப்போது அல்லாஹ் ஒன்றரை வருடத்திற்குள்ளாகவே ஒரு பிளாட், ஒரு வீடும் வாங்குவதற்கான வாய்ப்பினையும் வழங்கியுள்ளான். தற்போது அது பிரச்சார நிலையமாக பயன்பட்டு வருகிறது.

அங்கு சில தடைகள் இருப்பதால் பிரான்ஸின் கவுன்சிலிடம் மஸ்ஜித் கட்டுவதற்காக பிளான் எல்லாம் கொடுத்தும் அனுமதி கிடைக்கவில்லை. அங்கு இப்போது மாற்றம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அனுமதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நமது எதிர்பார்ப்பில் அல்லாஹ் அருள் செய்வான் என்ற நம்பிக்கையில் மஸ்ஜிதுக்கான அடிக்கல் நாட்டி விட்டு வந்தோம். துஆ செய்யுங்கள். சட்டரீதியான தடைகளை அகற்றுவானாக. அல்லாஹ் விரைவில் பள்ளிவாயில் கட்டுவதற்கு நமக்கு வாய்ப்பு வழங்குவானாக. அந்த மஸ்ஜித் அந்தப் பகுதியில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு காரணமாக அமையட்டுமாக. நல்ல அழகிய பகுதியில் மஸ்ஜித் உருவான பிறகு இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்தை அங்கு எடுத்து வைப்பதற்கு இன்ஷா அல்லாஹ் வாய்ப்பு கிடைக்கும். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் பற்றிய தவறான எண்ணம் உள்ளது. அதுவும் அகன்று விடும். வெலன்சியா பகுதியில் முஸ்லிம்கள் 16 ஆம் நூற்றாண்டு முதலே உள்ளனர். இந்த பகுதியின் முஸ்லிம்கள் பெரும் தியாகம் செய்து 300-400 வருடத்திற்கு பிறகுகூட இஸ்லாத்தை தமக்குள் நிலைபெறச் செய்திருந்தார்கள். இந்தப் பகுதி மீண்டும் இஸ்லாத்தின் கீழ் வர அல்லாஹ் உதவி செய்வானாக. அதுபோன்று பெட்ரோபாத்திற்கு அருகில் மஸ்ஜிதுடன் சேர்ந்து ஜமாஅத்திற்கு ஏற்படும் சில தேவைகளுக்கு ஏற்ப லஜ்னா ஹால், விருந்தினர் இல்லம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஸ்பெயினில் தேசிய செயற்குழுவில் தப்லீகின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. மற்ற விஷயங்களுக்காக திட்டக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விஷயங்களை விரைவுபடுத்துவதாக வாக்குறுதியும் தந்துள்ளார்கள். இடையில் ஏற்பட்ட கவனக்குறைவை அகற்றி விடுவதாக கூறியுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வாய்ப்புத் தருவானாக. உலகில் எப்போதும் இஸ்லாத்திற்கு எதிராக புழுதி கிளப்பப்படுகிற நேரம் தான் தப்லீகிற்குரிய நேரமாகும்.

மக்களின் கவனம் திரும்பும். நல்லியல்பு கொண்ட மக்கள் எதிர்ப்பை கேட்கும் போது உண்மையை அறிய விரும்புகின்றனர். பல்வேறு இடங்களுக்கு நான் சென்றதால் மக்களும் கவனமும் திரும்பியது. நமது மக்கள் அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிமுகப்படுத்தி சில வெளியீடுகளை அவர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பையும் பெற்றனர்.

எவ்வாறிருப்பினும் ஸ்பெயின் சுற்றுப்பயணத்தில் 10-12 நாள்கள் அங்கு பணிகளில் கழிந்தது. அதன் ரிப்போர்ட் நீங்கள் படிப்பீர்கள். இங்கிருந்து கிட்டத்தட்ட மூன்று நாட்கள் பயணம் செய்து இத்தாலி சென்றோம். அங்கும் எல்லா இடத்திலும் அல்லாஹ்வின் அருளைக் கண்டோம். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காலத்தில் இத்தாலியில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டது. முபல்லிக்குகளும் அங்கு அனுப்பப்பட்டனர். ஆனால் சில இணக்கமில்லாத சூழ்நிலையின் காரணத்தால் இதனை தொடர முடியவில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1937 -ல் மலக் முஹம்மது ஷரீஃப் சாஹிபை ரோம் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அவரது தப்லீகினால் 1940 வரை சிலர் அஹ்மதியத்தில்

நுழைந்தனர். பிறகு யுத்த சூழ்நிலையினால் இரண்டாம் உலகப்போர் சூழ்நிலையால் மலக் சாஹிப் எதிரிகளின் சிறையில் 1944 வரை இருக்க வேண்டியதாயிற்று. அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முஹம்மத் இப்ராஹீம் கலீல் சாஹிப், மவ்லவி முஹம்மது உஸ்மான் சாஹிப் இருவரையும் இத்தாலிக்கு அனுப்பினார்கள். இந்த குழுவிற்கு மலக் சாஹிபை தலைவராக்கினார்கள். மலக் சாஹிப் அவர்கள் அந்த இருவரையும் சிஸ்லி பகுதிக்கு அனுப்பினார். சிஸ்லி இத்தாலியின் கையில் உள்ள தீபகற்பப் பகுதியாகும். அங்கு 260 வருடங்கள் முஸ்லிம்களின் ஆட்சி இருந்தது. இங்கு முபல்லிக்குகள் முதலில் துன்பங்களை சகிக்க வேண்டியது வந்தது. ஒருமுறை 24 மணி நேரத்திற்குள் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்று Notice -ம் கிடைத்தது. பிறகு அல்லாஹ் அருள் செய்தான். அரசு அந்த Notice -ஐ ரத்து செய்தது. சில காலம் அங்கு வாழ்ந்தார்கள். இருப்பினும் சிரமமான நிலையே நீடித்தது. இவ்வாறு இத்தாலியின் பிரச்சார நிலையம் மூடப்பட்டது. இங்கிருந்த முபல்லிக்மார்களுக்கு நேர்ந்த சம்பவங்கள் ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் ஆகும். ரிப்போர்ட் எழுதுபவர்கள் அது குறித்தும் சிறிதளவாவது எழுதுவார்கள் - இன்ஷா அல்லாஹ்.

பிரச்சார நிலையம் மூடப்பட்டு இரண்டு முபல்லிக்குகளும் அங்கிருந்து சென்று விட்டனர். ஆனால் மலக் ஷரீஃப் சாஹிப் மட்டும் தனது வாழ்வாதாரத்தை தாமே அங்கு உருவாக்கிக் கொண்டு 1955 வரை இத்தாலியிலிருந்து தப்லீக் வேலைகள் செய்தார்கள். அதற்குப் பிறகு முறைப்படி தொடர்பு இல்லாததால் அங்கு அஹ்மதிகள் உருவாகிய பிறகும் அவர்களின் சந்ததிகளிடம் அஹ்மதிய்யத் நிலைபெறவில்லை. இப்போது அல்லாஹ் நல்ல சூழ்நிலையை உருவாக்கியுள்ளான். பாகிஸ்தான் அஹ்மதிகள் கணிசமானோர் அங்கு வந்துள்ளனர். கானாவைச் சேர்ந்த அஹ்மதிகளும் கணிசமாக உள்ளனர். கானியன் அஹ்மதிகளைக் கொண்ட ஒரு நகர் அங்கு உருவாகியுள்ளது. அரபியர்களின் ஒரு தூய ஜமாஅத்தும் அங்கு உருவாகி வருகிறது. அவர்கள் அனைவரும் மராக்கீஸ் மற்றும் வளைகுடா பகுதியைச் சேர்ந்தவர்கள். அரபி பேசக்கூடிய இந்த அஹ்மதிகளின் பேரன்பு, மாய்த்துக் கொள்ளும் பண்பு குறித்து முதலில் கூறினேன். இத்தாலியிலும் இதே நிலைதான் இருக்கிறது. சிறிது நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு அழத் தொடங்கி விட்டனர். முதலிலும் நான் குத்பாவில் குறிப்பிட்டது போன்று அல்லாஹ் அங்கு ஒரு பிரச்சார நிலையமும் சென்டரும் வாங்குவதற்கு வாய்ப்பு வழங்கியுள்ளான். 2008-ல் வாங்கப்பட்டது. மஸ்ஜித் கட்டவும் ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. மேயர் மற்றும் உள்ளூர் கவுன்சிலர்கள் நமக்கு முழுமையான ஒத்துழைப்பு தருகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக. விரைவில் இங்கு மஸ்ஜித் கட்டுவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. இங்கு பெண்கள் உட்பட இரண்டு மூன்று பேர் பைஅத் செய்தனர். அதுபோன்று சில மாதங்களில் பைஅத் செய்தவர்களும் (மீண்டும்) எனது கையில் பைஅத் செய்தனர் அல்ஹம்துலில்லாஹ்.

இங்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சியும் நடந்தது. நமது பைத்துத் தவ்ஹீத் என்ற சென்டருக்கு அருகில் ஒரு நகரம் உள்ளது. அதன் பெயர் மிகவும் நீளமானது. ஷான்பெட்ரோ இன்கசைலே கவுன்சிலர்கள், படித்தவர்கள், போலீஸ் அதிகாரிகளும் இந்த நிகழ்ச்சியில் உடன் இருந்தனர். அருகிலுள்ள நகரத்தின் மேயரும் வந்திருந்தார். அவர்கள் அனைவரும் நல் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினர். காலத்தின் சேவைகள், கல்வி பற்றி புகழ்ந்தார்கள். கடைசியில் நான் திருக்குர்ஆனின் ஒளியில் இஸ்லாத்தின் அமைதியை விரும்பும் போதனை பற்றி விளக்கினேன். ஜமாஅத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய அழகிய போதனை பற்றியும் கூறினேன். இவற்றின் அடிப்படையில் இஸ்லாத்தின் பெயரைக் கேட்டவுடன் அதன் மீது கோபப்படுவதற்குப் பதிலாக இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் பக்கம் கவனம் செலுத்துமாறு கூறினேன். பிறகு கூறினேன். நமது இந்த சென்டர் தொடர்பாக சில மாதங்கள் முன்பு இப்பகுதியில் எங்களுக்கு எதிராக பெரும் கூச்சலிடப்பட்டது. ஆனால் அல்லாஹ் அருள்புரிந்தான். இந்த நகரத்தின் மேயர், இத்தாலியைச் சேர்ந்த கட்டிடக்கலை வல்லுனர் ஆகியோர் நம் சார்பாக பெரும் பணி செய்தனர். இஸ்லாத்தின் போதனை அழகிய போதனை ஆகும். எனவே வெறுப்புச்சுவர் எழுப்புவதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் அன்பு, நேசத்தை உருவாக்குங்கள் என்று அவர்களிடம் நான் கூறினேன். அல்லாஹ்வின் அருளால் நிகழ்ச்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதற்குப் பிறகும் அல்லாஹ் நமது ஹக்கில் பூமியை திருப்புவானாக.

இதன் பிறகு சில வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை காண்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு நாலைந்து நாட்கள் தங்கிய பிறகு சுவிட்சர்லாந்து சென்றேன். இலண்டன் செல்வதற்கு முன் டியூரன் என்ற இடத்தில் மஸீஹின் உடையை காட்சிக்கு வைக்கப்படுவதாக கேள்விப்பட்டிருந்தேன். இந்தத் துணியைத்தான் இவர்கள் கஃபனே மஸீஹ் (மஸீஹின் கஃபன்) என்று அழைக்கின்றனர். அந்த உடையில்தான் சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய உடல் பொதியப்பட்டிருந்தது என்று சொல்லப்பட்டது. அந்த உடையை பார்க்க விரும்புகிறீர்களா என்று ஜமாஅத் தலைவர் என்னிடம் கேட்டார். நிச்சயமாக பார்க்கலாம் என்று நான் கூறினேன். உடனே அவர் சர்ச்சின் பொறுப்பாளர்களிடம் பேசினார். சர்ச்சின் பொறுப்பாளர்களுக்கு ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் கலீஃபா அதனைப் பார்க்க வந்துள்ளது குறித்து மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும் என்று கூறினர். சிறப்பாக ஏற்பாடு செய்து உங்களுக்கு அத்துணியை காட்டுவோம் என்று கூறி, பிறகு சுவிட்சர்லாந்து செல்லும் வழியில் டுரின் என்ற அந்த நகரம் உள்ளது. நாம் மதிய வேளையில் அங்கு சென்றோம். மாலை 5 மணிக்கு ஆலயத்தை அடைந்தோம். காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இதுவும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து செய்யப்பட்ட ஓர் ஏற்பாடு என்றே கருதுகிறேன். காட்சிக்கு வைக்கப்படும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை. மீர் மஹ்மூது அஹ்மத் சாஹிபிடம் இருந்து அது காட்சிக்கு வைக்கப்படுவதாகவும் இலண்டனிலிருந்து யாரையாவது அனுப்புங்கள்; அதனைப் பார்க்கலாம் என்று தகவல் வந்தது.

இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஏதாவது ஒரு ஆலிமைகூட இந்த உடையைப் பார்த்ததற்கான ஓர் சாட்சியாக ஆக்கியிருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எளிய அடிமையாகிய என்னை நேரடியாக பார்க்குமாறு செய்தான்.

இத்தாலியின் புரோகிராம் இருந்தும் கூட டுரின் (ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய உடை வைக்கப்பட்டுள்ள இடம்) செல்வது குறித்த எண்ணமே எனக்கு இருக்கவில்லை. வழியில் அது இருந்தது என்பதால் மட்டுமல்ல. வழியில் அமையா விட்டாலும் நான் கண்டிப்பாக சென்றிருப்பேன்.

அந்தக் காட்சியை நடத்திய அந்த டைரக்டர் பாதிரிகளுக்கெல்லாம் தலைமைப் பொறுப்பில் இருப்பவர். நம்மை வரவேற்க அங்கு வந்திருந்தார். பொதுமக்கள் செல்லாத பிரத்யேக வழி வாயிலாக நாம் உள்ளே அழைத்து செல்லப்பட்டோம். பொதுவாக அங்கு கேமராக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. நான் அவர்களிடம் கேட்ட போது கேமராவை பயன்படுத்துங்கள். ஆனால் Flash பயன்படுத்தாதீர்கள் என்று கூறினர். M.T.A ஊழியர்கள், நமது புகைப்பட நிபுணர்கள் புகைப்படம் எடுத்தனர். நாம் முதல் ஹாலில் நுழைந்த போது பெரிய திரையில் காட்சிகள் காட்டப்பட்டன. அதில் ஒரு பிம்பத்தைக் காட்டி அதைப் பற்றி விவரித்தார்கள். இது முகம், கை, கால் என்று விளக்கி Close up -லும் காட்டுகின்றனர். இதையெல்லாம் காண்பித்ததோடு அந்த டைரக்டர் சுருக்கமான அறிமுகம் செய்தவாறு கூறினார். கி.பி. 4-வது நூற்றாண்டின் வரலாறுகள் நமக்கு தெரிய வருகிறது. இது எங்கெல்லாம் இருந்தது என்பதும் தெரிய வருகிறது. 5-வது நூற்றாண்டிலும் இது எங்கிருந்தது என்பது தெரிய வருகிறது என்றார். இது ஒரு துணி ஆகும். இதன் நீளம் 4.42 மீட்டர், அகலம் 1.13 மீட்டர் ஆகும். அதன் பிம்பத்தை பார்க்கும் போது ஒரு நல்ல மனிதரின் பிம்பமாகத் தெரிகிறது. இந்த துணியின் வரலாறை ஆய்வு செய்தால் அவர்கள் கூறுவது போன்று இது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய பிம்பம் தான் என்ற கருத்திற்கு வருகிறோம். இதனை 1898 -ல் ஸிக்வுண்டா பிரியா என்பவர் படம் எடுத்தார்.

அவர் இந்த துணியின் பிம்பத்தை வைத்து வரைந்த போது அசல் உருவம் கிடைத்தது. அதனைப் பார்த்து விட்டு ஆராய்ச்சிக்கூடத்தை அடைந்தோம். அங்கு stage போன்று ஓரிடத்தில் கண்ணாடிப் பெட்டியில் காட்சிக்காக வைக்கப்பட்டு பின்புறத்திலிருந்து வெளிச்சம் கொடுக்கப்படுகிறது. இந்த பெட்டியினுள் Gases அடைக்கப்பட்டுள்ளது. இந்த துணி வீணாகமல் இருப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்று டைரக்டர் கூறினார். நாம் மற்றவர்கள் இங்கு வருவதை நிறுத்தி விட்டு மிக அருகில் சென்று நாம் சிறிது நேரம் நின்று பார்த்தோம். புகைப்படம் எடுப்பவர்கள் புகைப்படம் எடுத்தனர். நாம் அடுத்தவரை அனுப்பி பார்க்கச் சொன்னாலும் அவர்களுக்கு இவ்வளவு நேரம் அங்கு நின்று பார்ப்பதற்கு நேரம் கிடைத்திருக்காது.

சித்திரங்களும், விளக்கமும் அடங்கிய ஒரு சிறிய நூல் அங்கு வழங்கப்பட்டது. அந்த சித்திரங்களில் சில விளக்கமும் எழுதப்பட்டுள்ளது. அது குறித்து டைரக்டர் கூறினார். இந்த துணி பாலஸ்தீன் பகுதியிலிருந்து வந்ததாக எழுதப்பட்டுள்ளதாக நிரூபணம் ஆகி உள்ளது. மேலும் நாம் மஸீஹின் கஃபன் என்று கூறுவது சரிதான் என்றும் நிரூபணம் ஆகி உள்ளது. இன்னொரு ஆச்சரியமான விஷயம் 1898 -ல் இந்த படம் எடுக்கப்பட்டுள்ளது. முதலில் இது புனிதமான ஒன்றாக கருதப்பட்டது. பிறகு மஸீஹின் கஃபன் என்று கூறப்பட்டது. 1899 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவ்கள் மஸீஹ் இந்துஸ்தான் மே (இந்தியாவில் இயேசு) என்ற நூலை எழுதினார்கள்.

இது தவிர ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது மற்ற நூல்களிலும் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் இருந்து உயிருடன் தப்பிய செய்திகளை குறிப்பிடுகிறார்கள். (மர்ஹமே ஈசா) ஈசாவின் களிம்பு என்ற மருந்தைப் பற்றியும் எழுதியுள்ளார்கள். ஆனால் இந்த (மஸீஹ் இந்துஸ்தான் மே) நூலில் விரிவாக எழுதியுள்ளார்கள். கஃபனே மஸீஹ் பற்றி அந்தக் காலத்தில் ஆங்கில நூல்களில் எந்த குறிப்பும் இல்லை. விளக்கமும் இல்லை. ஆனால் அவர்களின் காலத்திலேயே அல்லாஹ் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பான மேலும் பல உண்மைகளை வெளிவரச் செய்து ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து தப்பியதற்கான சான்றுகளை வழங்கியுள்ளான். இந்த காட்சியை பார்த்த பிறகு டைரக்டர் நம்மை ஒரு கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார். அதன் கீழ்பகுதியை சுற்றிப் பார்த்து விட்டு மேலே சென்றோம். மேலும் ஒரு நூலகமும் இருந்தது. நூலகம் பார்க்கிறீர்களா என்று கேட்டனர். போவோம் என்றேன்.

மேலே சென்றதும் அங்கு ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு பேராசிரியர் ஆவார். இவரை சந்திக்க வேண்டும் என்று முன்னரே கூறப்பட்டிருந்தது. இஸ்லாமிய கல்வியின் வல்லுனர் என்று இவர் அழைக்கப்படுகிறார். பல்வேறு அரபு நாடுகளில் சென்று கல்வி கற்றவர். எங்களை ஒரு மீட்டிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிறிது நேரம் இருந்தோம். மிகவும் கண்ணியத்துடன் அமரச் செய்தார். கேள்வி – பதில் பேச்சுகள் ஆரம்பமாகின. இதனை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது? என்று கேட்டார். என்ன விஷயங்கள் இங்கு உங்களை கவர்ந்தன? என்ற கேள்வி உட்பட இன்னும் சில விஷயங்களை பேசினோம்.

முதலில் நான் உங்களுக்கு இவரை அறிமுகம் செய்தேன். இவர் ஒரு பெரிய பாதிரி ஆவார். டைரக்டர் என்று நான் குறிப்பிட்ட நபர் கஃபனே மஸீஹ் என்ற மஸீஹின் கஃபன் துணியைப் பாதுகாக்க போடப்பட்டுள்ள கமிட்டியின் தலைவரும் ஆவார். கண்காட்சியும் கூட அவரது கண்காணிப்பில்தான் நடக்கிறது. இஸ்லாமிய அறிவு பெற்ற நிபுணராகவும் உள்ளார். ஒருவர் அங்கு வந்திருந்தார். இந்த நிகழ்ச்சிகள் தற்செயலாக ஏற்பாடு செய்யப்பட்டது. நாங்கள் இந்த ஊருக்கு வரும் போதுதான் இங்கு மஸீஹின் கஃபனை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக அறிந்தோம். உடனே அதனைப் பார்க்கும் ஆர்வத்தில் வந்தோம். நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்தை உடையவர்கள். இந்த துணி நிச்சயமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்காக நீங்கள் பயன்படுத்தியதாகவே இருக்க வேண்டும். ஆனால் அதிலிருந்து பெறும் தீர்மானத்தில்தான் நமது கொள்கை வேறுபடுகிறது.

அஹ்மதிகளாகிய நாம் கூறுகிறோம். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபியாக இருந்தார்கள். யஹூதிகள் அவரை சிலுவையில் அறைந்து கொல்ல விரும்பினர். ஆனால் இவ்வாறு மரணமடைவது ஒரு நபியின் கண்ணியத்திற்கு மாற்றமானது. எனவே இறைவன் அவரை சிலுவையில் இருந்து காப்பாற்றினான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிறுவுனர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சிலுவைச் சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் வாழ்ந்ததை நிரூபித்துள்ளார்கள். இந்த துணி கூட ஈஸா (அலை) அவர்களின் சிலுவை மரணத்திற்கு ஆதாரமன்று. சிலுவையிலிருந்து காப்பாற்றப்பட்டதற்கு ஆதாரமாகும். இதன் காரணமாக இது அருளுக்குரிய ஒன்றுதான். எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள கருத்து வேறுபாடும் இதுவே ஆகும் என்று விளக்கினேன்.

அந்த மனிதர் கேட்டார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் காஷ்மீரில் இறந்ததாக நீங்களும் கூறிகிறீர்களா?

நான் கூறினேன். ஆம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனை நிரூபித்திருக்கிறார்கள். அன்னார் இது பற்றி ஒரு நூலும் எழுதியுள்ளார்கள். மஸீஹ் இந்துஸ்தான் மேன் என்பது அந்த நூலின் பெயர் ஆகும்.

மேலும் பல கேள்விகள் கேட்டார். ஜமாஅத் அஹ்மதிய்யாவின், கிலாஃபத்தின் தேர்தல்கள் சம்பந்தமாகவும் கேட்டார். இன்னும் பல விஷயங்கள் பற்றி பேசப்பட்டன. நான் அவர்களிடம் கூறினேன். மஸீஹின் கஃபன் என்று அழைக்கின்ற துணியை பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது எனது நற்பேறாகும். நீங்களும் அதனை அவரது கஃபன் துணி தான் என்று கூறுகிறீர்கள். இந்த கண்காட்சி பொதுவாக 20-25 வருடங்களுக்குப் பிறகு தான் நடக்கிறது.

அவர் கூறினார்: சில வேளை அதை விட குறுகியகால இடைவெளியிலும் காட்டுகிறார்கள். 1998 -லும் 2000 -லும் கூட இது காட்சிக்கு வைக்கப்பட்டது. 1998 -ல் நடந்த பிறகு இரண்டே வருடத்தில் 2000 -லும் வைக்கப்பட்டது. காரணம் ஈஸா (அலை) அவர்கள் பிறந்து 2000 வருடங்கள் ஆனதை நினைவுபடுத்தி வைக்கப்பட்டது. இவ்வருடம் அதனை கண்காட்சிக்கு வைக்கும் திட்டம் இல்லை. ஆனால் போப் அதனை காட்சிக்கு வைக்குமாறு கட்டளையிட்டுள்ளார். மே 10 -ம் தேதி வரை இது காட்சிக்கு வைக்கப்படும். பலர் இதனை பார்க்க வந்துள்ளனர். 10 வருடத்திற்குப் பிறகு இது இப்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இறைவன் நமது பயணத்தையும், இந்த கண்காட்சியையும் ஒன்று சேர்த்து விட்டான். அதனால் நமக்கும் அதனைப் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. போப் மே 2 -ம் தேதிக்கு இதனைக் காண வருகிறார் என்றனர். ஆனால் அல்லாஹ் அதற்கு முன்பே நாம் பார்ப்பதற்கு வாய்ப்பளித்து விட்டான்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பட்ட துன்பங்கள் குறித்து கூறினார். நபிமார்கள் எப்போதும் துன்பத்திற்குள்ளாக்கப்படுகின்றனர். இக்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் நிறைய துன்பங்களை சகித்துள்ளார்கள். பிறகு ஜமாஅத்தைப் பற்றி அவர் கேட்டார். பல்வேறு மார்க்கத்தினரோடு நீங்கள் உரையாடக் காரணமென்ன? நான் கூறினேன். மார்க்கத்தில் எந்தக் கட்டாயமும் இல்லை என்று அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி. நேர்வழியை வழங்குவது இறைவனது வேலையாகும். தூதுச் செய்தியை கொண்டு சேர்ப்பது மட்டுமே நமது வேலை. ஆனால் இன்னொருபுறம் மனிதனின் கண்ணியத்தை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு மார்க்கத்தவருக்கும் நாம் மதிப்பளிக்கிறோம். அவர்களிடம் பேசவும் செய்கிறோம். பல்சமயக் கருத்தரங்கு பற்றியும் பேசினோம். மேலும் இடையே ஒரு கேள்வியை அவர் கேட்டுக் கொண்டே இருந்தார். கிறித்தவ உலகம் உலகியல்ரீதியாக முன்னேற்றம் பெறுகிறது எனில் அது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பரக்கத்தால் கிடைக்கிறது. அவர் இறைவன் என்பதால் அல்ல. மாறாக அவர் பட்ட கஷ்டங்கள் அல்லாஹ் அவருக்கு வழங்கிய வாக்குறுதியின் காரணத்தால் கிடைத்துள்ளது. நீங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய உண்மையான தூதுச் செய்தியை புரிந்து அதனை பரப்ப வேண்டும் என்பதே எனது துஆவாகும் என்று நான் அவருக்கு கூறினேன்.

பிறகு அவர் நூலகத்தை காட்டினார். அதற்குப் பிறகு இஸ்லாத்தைப் பற்றிய நூல்களையும் இதில் வைக்கலாமே? குர்ஆன் வைத்துள்ளீர்களா இல்லையா? என்றேன். அவர் இணக்கமான பதில் அளித்ததைத் தொடர்ந்து அரபி மொழி பேசுபவர்கள் இங்கு வருவதால் தப்ஸீரே கபீரின் அரபி மொழியாக்கத்தை தாஹிர் சாஹிப் மிகவும் முயற்சி செய்து மொழிபெயர்த்துள்ளார்கள். அதனை நூலகத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பயணம் நம்மைப் பொருத்த அளவில் பல விஷயங்களை அறியத்தக்க வாய்ப்பாக இருந்தது. ஜமாஅத்தின் அறிமுகம், தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் காரணமாக அமைந்தது.

கிறித்தவ உலகம், உண்மையைப் புரிய வேண்டும். கஃபனே மஸீஹ் என்பது கஃபன் அல்ல. மாறாக, ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து உயிருடன் தப்பி நீண்ட வாழ்நாளை பெற்றதற்கான ஒரு அற்புத ஆதாரமாகும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

செய்யது மீர் மஹ்மூது அஹ்மத் சாஹிப் அவர்களின் கண்காணிப்பில் மர்ஹமே ஈஸா (ஈஸாவின் களிம்பு) பற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த மருந்து ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் (உடற்சூட்டில்தான்) உடம்பின் பிம்பத்தை துணியில் பதித்தது. அது இப்போது பெரும் சாட்சியாக அமைந்தது. அந்த ஆராய்ச்சி தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியபடி சில வேதிவினைகளும் நடந்துள்ளன. அதனால்தான் துணியில் அவரது உருவம் பதிந்தது. அம்மோனியா மற்றும் சல்ஃபர் இரண்டும் சேர்ந்த வேதிவினையால் அவரது உருவம் அதில் பதிந்துள்ளது. அப்பகுதியில் அந்த இரு பொருள்களும் அதிகமாக காணப்படுகின்றன. பெரும் பூகம்பம் ஏற்பட்டு அதனால் பூமியிலிருந்து சில வாயுக்கள் வெளிப்பட்டு அந்த துணியில் பட்டு அதனால் உருவம் இன்னும் நன்றாக துணியில் பதிந்து விட்டது என்று கருதுவதும் மிகையல்ல.

மீர் மஹ்மூது அஹ்மத் சாஹிப் பற்றி குறிப்பிட்டேன். அவருடன் ஒரு குழு இந்த இந்த ஆராய்ச்சியை செய்து வருகிறது. அவரது ஆராய்ச்சிகளை கிறித்தவ பெண் அறிஞர் ஒருவர் நார்மர்வாலர் என்பவர் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளார். அந்த எழுத்தாளர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். அல்லாஹ் இதுபோன்ற பெரும் ஸ்காலர்களை இனியும் தோன்றச் செய்வான். இந்த ஆராய்ச்சியை அவர்கள் மேலே இன்னும் எடுத்துச் செல்வர்.

இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதாரமாக கிறித்தவர்களிடமிருந்து அல்லாஹ் சில விஷயங்களை வெளிவரச் செய்கிறான். அவை நமக்கு சாதகமாகி விடுகின்றன. இந்த ஆராய்ச்சியெல்லாம் உலகத்தை திருப்திப்படுத்துவதற்காகவே செய்யப்படுகின்றன. நம்மைப் பொருத்தவரை நாம் இக்கொள்கையில் உறுதியாகவே இருக்கிறோம். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் இருந்து தப்பிவிட்டார். காஷ்மீர் கான்யார் வீதியில் அடங்கப்பட்டு விட்டார். ஆனால் இக்காலத்தில் இன்னொரு வதந்தியை கிளப்புகின்றனர். கஃபனே மஸீஹ் அவ்வளவு பழையதாக இருக்க முடியாது. ஆயிரம் வருடம் பழையதுதான் என்று சிலர் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இதனை தவறு என்று நிரூபிக்க முயற்சியும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த துணியால் அவர் சிலுவை மரணத்திலிருந்து தப்பி விட்டார் என்பதற்கான அடையாளங்கள் உள்ளன. அதனை கிறித்தவர்களால் இதனை சகிக்க முடியவில்லை. காஷ்மீரில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய கபரை பார்ப்பதற்கு முஸ்லிம் தரப்பிலிருந்தும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏதாவது நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அதனால் மஸீஹின் கஃபன் குறித்து இப்போது சில ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தோ இது (மஸீஹின் கல்லறை) முஸ்லிம்களிடம் இருக்கிறது. அவர்கள் அதனை ஆய்வு செய்து இஸ்லாத்தின் உயர்வை நிரூபித்துக் காட்ட முயன்றிருக்கலாம்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஈஸாவின் களிம்பு குறித்து கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்திலேயே ஒரு மருத்துவ நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த மருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய காயத்திற்காக தயாரிக்கப்பட்டது. இந்த நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. மாமூன் ரஷீதின் ஆட்சியில் அரபி மொழியிலும் வெளியிடப்பட்டது. இறைவனின் வல்லமை கொண்டு ஒவ்வொரு மருத்துவ வல்லுனர்களும் – அவர் யஹூதியாக இருப்பினும், மஜூஸி – முஸ்லிமாக இருப்பினும் நெருப்பு வணங்கியாக இருப்பினும் அனைவரும் தமது நூல்களில் இந்த மருந்தை எழுதியுள்ளனர். இவர்கள் அனைவரும் இந்த மருந்தைக் குறித்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது சீடர்கள் உருவாக்கினர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மருந்து ஆழமான காயம், அடிபட்ட காயத்திற்கு சிறந்த மருந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. இரத்தம் வழியும் காயத்தில் இம்மருந்தை வைத்தால் இரத்தம் உடனே காய்ந்து விடுகிறது. இதில் அடங்கிய மருத்துவ பொருளால் புண் பெரிதாகாமல் காய்ந்து விடுகிறது. இந்த மருந்து பிளேக் நோய்க்கும் பயனளிக்கிறது.

இந்த மருந்தை சிலுவை சம்பவத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தாமே இல்ஹாம் மூலமாக அறியப் பெற்று இம்மருந்து உருவாக்கப்பட்டதா அல்லது மருத்துவர் ஒருவருடைய ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டதா என்று தெரியவில்லை.

இந்த மருந்தை பயன்படுத்தியதால் சில நாட்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய காயம் ஆறியது. மூன்று நாட்களில் ஜெருசலத்திலிருந்து கலிலியாவுக்கு நடந்து செல்லும் அளவுக்கு ஆற்றலும் கிடைத்தது.

இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்: யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சபிக்கப்பட்டவராக்க விரும்பினர். சிலுவையில் அறைந்து கொல்ல விரும்பினர். அவரை கைது செய்து சிலுவையில் அறைய ஏற்பாடும் செய்து விட்டனர். ஆனால் இறைவன் யூதர்களின் தீய விருப்பத்திலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சில காயங்களோடு காப்பாற்றினான். சில நாட்கள் அம்மருந்தை பயன்படுத்தியதில் காயம் முற்றிலும் ஆறியது. எந்த அளவுக்கு எனில் திரும்பவும் பிடித்து அவரை அரைவதற்கு அடையாளமாகக் கூடிய புண்ணின் தெளிவான வடுக்கண் கூட மறைந்து விட்டன. இது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் இருந்து காப்பாற்றப்பட்டதற்கு ஆதாரமாகும். உண்மையில் இது அவரது இரண்டாவது வாழ்விற்கான கட்டளை அடிப்படையில் வழங்கப்பட்டதாகும். அது தான் அவரது சீடர்களுக்கு கிடைத்தது. அவர் உயிருடன் அமைதியாக இருப்பதாக அவர்களுக்கு தகவல் கிடைத்தது. சிலுவையிலிருந்து அவர் தப்பியுள்ளதை சீடர்கள் வியப்புடன் பார்த்தனர். யூதர்களிடம் மாட்டிக் கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிரை விட்டுவிட்டதாக கருதியிருந்தனர். அந்த சீடர்களிடம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமது சிலுவைக் காயங்களை காட்டினார்கள். அப்போது யூதர்களின் கையில் இருந்து இறைவன் அவருக்கு ஈடேற்றம் தந்து விட்டான் என்று சீடர்களுக்கு உறுதி ஏற்பட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸீஹ் இந்துஸ்தான் மே – இந்தியாவில் இயேசு என்ற தமது நூலில் கூறுகின்றார்கள்:

நான் இந்த நூலை, உண்மையான சம்பவங்களை முழுமையாக நிரூபிக்கப்பட்ட வரலாற்று சான்றுகள், அன்னிய சமுதாயத்தின் புராதன நூல்களிலிருந்தும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஆரம்பகால மற்றும் கடைசி கால வாழ்க்கையைப் பற்றி பரவியுள்ள ஆபத்தான கருத்துக்களை அகற்றுவதற்காக எழுதியுள்ளேன். எனவே நான் இந்த நூல் மூலம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டு மரணிக்கவுமில்லை; வானத்திற்கு செல்லவுமில்லை – அல்லது ஒருபோதும் வானத்தில் இருந்து பூமிக்கு இறங்கப்போவதும் இல்லை. மாறாக அவர் 120 வயது வாழ்நாளைப் பெற்று காஷ்மீரில் இறந்து விட்டார். ஸ்ரீநகர் கான்யார் வீதியில் அவரது கபர் உள்ளது என்று நிரூபிப்பேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நூலின் தொடக்கத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து தப்பியதற்கான ஆதாரம் தந்துள்ளார்கள். திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் புராதன நூல்களின் ஆதாரம் தந்துள்ளார்கள். அவற்றிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணத்தில் இருந்து தப்பியிருப்பது தெரிய வருகிறது. இந்நூலின் மூன்றாவது பகுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மருத்துவ நூல்களையும் ஆதாரமாக எழுதியுள்ளார்கள். எனவே ஈஸாவின் களிம்பைப் பயன்படுத்தி நிவாரணம் பெற்றது குறித்தும் குறிப்பிடுகிறார்கள். இறுதியில் வரலாற்று சான்றுகளை வரலாற்று நூல்களிலிருந்து எடுத்து எழுதியுள்ளார்கள். ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள் என்பதை குறிப்பிடுகிறார்கள்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

எனது மஸீஹ் ஹிந்துஸ்தான் மே என்ற நூலை ஆரம்பம் முதல் முடிவு வரை படிக்கின்ற ஒருவர் முஸ்லிமாக இருப்பினும், கிறித்தவராக இருப்பினும், யஹூதியாக இருப்பினும் அல்லது ஆரியராக இருப்பினும் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு சென்றார் என்ற கருத்து பொய், இட்டுக்கட்டு என்பதை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது சாத்தியமில்லை.

எவ்வாறிருப்பினும் டூரின் என்ற நகரில் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு சுவிட்சர்லாந்து சென்றேன். அங்கும் சிலருக்கு பைஅத் செய்ய வாய்ப்பு கிடைத்தது. எனது கையில் பைஅத் செய்தனர். இத்தாலியின் ஓர் இளைஞர் அங்கு பணி செய்கிறார். மார்க்கக் கல்வி கற்கும் ஆர்வமும் அவருக்கு இருக்கிறது. சில வருடம் முன்பு பைஅத் செய்தார். என்னையும் முதன்முதலாக சந்தித்தார். ஜமாஅத் நூல்கள் சிலவற்றை இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்து விட்டார். நான் அவரிடம் கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில நூல்களையும் மொழிபெயருங்கள்.

மஸீஹ் இந்துஸ்தான் மே என்ற நூலை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறேன். விரைவில் முடித்து விடுவேன் என்றார். அல்லாஹ் அவரது இல்ம் மற்றும் ஞானத்தில் வளர்ச்சியை தருவானாக. அவரது ஈமானில் பரக்கத்தை வழங்குவானாக.

ஜுமுஆவுக்குப் பிறகு சுவிட்சர்லாந்திலிருந்து பிரான்ஸ் சென்றேன். பிராட்ஸ்பர்க்கில் தங்கினேன். அதுவும் ஐரோப்பாவின் பாராளுமன்ற தலைமையம் இருப்பதால் அது பிரபல்யமாக உள்ளது. ஆனால் ஜமாஅத்திற்கு இந்த பகுதியில் என்ன முக்கியத்துவம் உள்ளது என்று பார்ப்பதாக இருந்தால் இங்கு ஜமாஅத்தின் எண்ணிக்கை வளர்ச்சி அடைந்து கொண்டுள்ளது. 200 பேர் கிட்டத்தட்ட உள்ளனர். மகிழ்ச்சிக்குரிய விஷயம் அதில் 70 சதவீதம் பேர் பாகிஸ்தானியர் அல்லாத அஹ்மதிகள். இக்லாஸில் வளர்ச்சி பெற்ற மக்களாக உள்ளனர். இங்கும் சுற்றுப்பயணத்தின் போது இரு பைஅத்துகள் நடந்தன. சில பிரமுகர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாத்தின் போதனையை எடுத்து வைக்க எவ்வாறு அமைதியை நிலைநாட்டலாம் என்று எடுத்துரைக்கும் வாய்ப்பு கிடைத்தது. மைக்கேல் ரீபல் என்பவர் வந்திருந்தார். பாதிரி ஒருவர் உடன் வருவதாக இருந்தது வரவில்லை. பேச்சுவார்த்தை நடந்தது. சாந்தி சமாதானமான இஸ்லாமிய போதனைகளைப் பற்றி கூறினேன். மிகவும் கண்ணியமான மனிதர்.

அரபு நாட்டில் இருந்ததால் அரபியும் தெரியும் என்றார். யூதர்கள், கிறித்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று மதத்தவரும் ஓரிறைக் கொள்கையில் ஒன்றுபட்டக் கருத்துடையவர்கள் ஆவர் என்று அவர் கூறினார்.

மிகவும் சரிதான் என்று நான் கூறினேன். ஆனால் நீங்கள் இப்போது திரித்துவத்தை ஒப்புக்கொள்வீர்கள் எனில் அல்லாஹ் முன்னரே கூறி விட்டான். திருக்குர்ஆனில் இறைவன் கூறுகின்றான்:

நம்மிருவருக்கும் பொதுவான கருத்தின் பக்கம் வாருங்கள். (3:65)

அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டோம். அவனுக்கு இணை வைக்க மாட்டோம். இதுதான் நாம் இருவருக்கும் வழங்கப்பட்ட போதனையாகும். இதன் பக்கம் வாருங்கள் என்று திருக்குர்ஆன் அழைக்கிறது.

அம்மனிதர் கூறியது கேட்டு – ஒரே இறைவனைப் பற்றி அவர் கூறுவது கேட்டு வியப்பாக இருந்தது.

M.T.A.-வில் உங்கள் குத்பாக்களை நான் கேட்டு வருகிறேன் என்றும் கூறினார்.

எவ்வாறாயினும் நல்ல சூழ்நிலையில் கணிசமான நேரம் பேச்சு வார்த்தை நடந்தது. நான் ஏற்கனவே கூறியது போன்று இது அங்கு ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்கு காரணமாக அமைந்தது மட்டுமின்றி அஹ்மதிய்யத்தின் அழகிய போதனையைக் கொண்டு சேர்க்கவும் வாய்ப்பாக அமைந்தது.

ஸ்டாபர்கில் 70% பாகிஸ்தானைச் சேராதவர்கள் ஆவர். அரபி பேசும் நாடுகளைச் சார்ந்தவர்களே அதிகம். இந்த பயணத்தில் புதிதாக பைஅத் செய்த பலருக்கு இறைவன் கனவின் மூலமாக இந்த பகுதியை நான் கடந்து செல்வதாக அறிவித்துள்ளான். எனவே அவர்கள் நம்முடன் தொடர்பு கொண்டனர். அவர்களது ஈமானின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது. பிரான்சின் அமீர் சாஹிப் பயண ஏற்பாட்டிற்காக பல இடங்களுக்கு சென்றார். அவரும் கூறினார். பயணத்தின் போது வியக்கத்தக்க முப்பது புதிய பைஅத்துகள் கிடைத்தன.

ஒரு பைஅத்தை குறிப்பிட்டு விட்டு எழுதுகிறார். ஆச்சரியமான சம்பவம். மார்ச் 29 ஆம் தேதி நாங்கள் பிரான்சிலிருந்து ஸ்பெயினுக்கு சென்று கொண்டிருந்தோம். பிறகு நாங்கள் திரும்பி வந்து சேர்ந்தபோது கடிதம் மூலம் எனக்கு ஒரு மராகஸ் பெண்ணின் பைஅத் பாரம் கிடைத்தது. அவர் பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்தவர். நான் போன் செய்து அவரை தொடர்பு கொண்ட போது நீண்ட காலமாக M.T.A.பார்க்கிறேன். சில நாட்களுக்கு முன் கனவு கண்டேன். பல அஹ்மதிகளின் வாகனங்கள் இங்கு செல்கின்றன. அதில் நானும் அஹ்மதிகளின் வண்டியில் இருக்கிறேன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று அப்பெண்ணிடம் அமீர் சாஹிப் கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண் நாங்கள் பிரான்ஸிலிருந்து ஸ்பெயின் செல்லும் போது கடந்து சென்ற ஒரு ஊரைக் குறிப்பிட்டு அந்த ஊரைச் சேர்ந்தவர் என்று கூறினார்கள். அதோடு நாங்கள் அந்த ஊரைக் கடந்து சென்ற அதே தேதியில் பைஅத் படிவத்தையும் நிரப்பியுள்ளார்கள்.

திடீரென்று இந்த நிகழ்ச்சிகள எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் இறைவனது அருட்கொடையைப் பெற்றதாகஅமைந்திருந்தது. இந்தப் பயணத்தின் போது பலர் பைஅத் செய்யும் வாய்ப்பையும் பெற்றார்கள். புதிதாக ஜமாஅத்திற்கு வந்தவர்களின் ஈமானில் இறைவன் வளர்ச்சியை வழங்குவானாக! ஜமாஅத்தின் வளர்ச்சியை நாம் எப்போதும் காண்பவர்களாக இருப்போமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 30.04.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**